

ஆத்தூர் ஒன்றியம் எஸ்.பாறைப்பட்டி ஊராட்சி ஆதிதிராவிடர் காலனியில் கலைஞரின் கனவு இல்ல திட்ட வீடுகள் கட்டும் பணியை ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் ஐ.பெரியசாமி துவக்கி வைத்தார். உடன் ஒன்றியச் செயலளார் முருகேசன், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் பாஸ்கரன், ஒன்றிய பெருந்தலைவர் மகேஸ்வரி, ஊராட்சி மன்றத் தலைவர் ராஜேஸ்வரி, ஒன்றியக்குழு உறுப்பினர் செல்வி காங்கேயன் உட்பட பலர் உள்ளனர்.



மதுரை வடக்கு மாவட்டச் செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தியை இந்தியா கூட்டணியின் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மதுரை நாடாளுமன்ற தொகுதி வேட்பாளர் சு.வெங்கடேசன் நேரில் சந்தித்து வாழ்த்து பெற்ற போது எடுத்த படம். உடன் மாவட்ட துணைச் செயலாளர் ஆ.வெங்கடேசன் எம்.எல்.ஏ., மற்றும் கழகத்தினர், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி நிர்வாகிகள் உள்ளனர்.

### சீர்மரபினருக்கு டி.என்.டி. ஒற்றைச் சான்றிதழ் வழங்க உத்தரவிட்ட

# ஒப்பற்ற தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு நன்றி!

## தமிழ்நாடு அரசு சீர்மரபினர் நலவாரிய துணைத் தலைவர் இராசா அருண்மொழி அறிக்கை!

சென்னை, மார்ச் 18-

சீர்மரபினருக்கு டி.என்.டி. ஒற்றைச் சான்றிதழ் வழங்கி ஆணை பிறப்பித்த ஒப்பாருமிக்காருமில்லா முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நன்றி என சீர்மரபினர் நலவாரிய துணைத் தலைவர் இராசா அருண்மொழி தெரிவித்துள்ளார்.



அவரது நன்றி அறிக்கை வருமாறு:-

சீர்மரபினர் இன மக்களுக்கு ஒரே மாதிரியான சான்றிதழ் வழங்குவதற்கு உத்தரவிட்ட முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு மாபெரும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

சீர்மரபினர் வகுப்பினர்களுக்கு Denotified Communities மற்றும் Denotified Tribes என இரண்டு சான்றிதழ்கள் வழங்குவதால் குழப் பமான சூழ்நிலை இருந்தது. இதனை அகற்றுவதற்கான முயற்சியை எடுப்போம் என்று முதலமைச்சர் அவர்கள் வாக்குறுதி அளித்திருந்தார்கள். 'சொன்னதைச் செய்வோம்' என்ற முத்தமிழறிஞர் கலைஞர் வழியில் செயல்படும் முதலமைச்சர் அவர்கள், அந்த இரட்டை சான்றிதழ் குழப்பங்களுக்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டார்கள்.

சுதந்திரம் பெறுவதற்கு முன் ஆங்கிலேய ஆட்சியில் குற்றப்பரம்பரை சட்டத்தினால் (Criminal Tribes Act) பாதிக்கப்பட்ட வகுப்பினர்கள், சீர்மரபினர் வகுப்பு என வகைப்படுத்தப்பட்டார்கள். இம்மக்களின் கல்வி, வேலை வாய்ப்புக்கான பல்வேறு வழிமுறைகளை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தனது ஆட்சிக் காலத்தில் செயல்படுத்தினார்கள்.

1969 ஆம் ஆண்டு முதல் முதலில் முதல்வர் ஆன கலைஞர் அவர்கள்தான் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையை உருவாக்கினார்கள். பிற்படுத்தப் பட்டோர் நலனுக்கான சட்டநாதன் ஆணையத்தை அமைத்தார்கள். அந்தப் பரிந்துரைப்படி சமூகநீதியை அமல்படுத்தினார்கள். பிற்படுத்தப் பட்டோருக்கு 31 சதவிகித இட ஒதுக்கீடு வழங்கினார்கள்.

1989 ஆம் ஆண்டு மிகவும் பிற்படுத்தப்பட்டோர் என புது இடஒதுக்கீடு உரிமையை உருவாக்கி கல்வி, வேலை வாய்ப்பில் இந்த சமூக மக்கள் முன்னேற வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்தவர் முதல்வர் கலைஞர் அவர்கள். மிகப் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பினருடன் சேர்த்து 20 விழுக்காடு இடஒதுக்கீடு இம்மக்களுக்கு வழங்கப் பட்டு வருகிறது. இதில் 68 வகுப்பினர்கள் சீர்மரபி னர் என வகைப்படுத்தப் பட்டுள்ளன.

முத்தமிழறிஞர் கலைஞர் தலைமையிலான அரசால் 2008 முதல் சீர்மரபினர் வகுப்பினர் என சான்றிதழ் வழங்கப்பட்டு வருகிறது. பின்னர் 2019 ஆம் ஆண்டில் அன்றைய அரசால் மாறுபாடான அறிவிப்பு செய்யப்பட்டது. மாநில அரசின் உதவிகள் பெறுவதற்கு இந்த 68 வகுப்பினர்களும் சீர்மரபினர் (DNC) என அழைக்கப்படுவர் எனவும், ஒன்றிய அரசின் நலத்திட்ட பயன்களைப் பெறுவதற்கு இந்த 68 வகுப்பினர்களும் சீர்மரபினர் (DNT) என அழைக்கப் படுவர் என ஆணை வெளியிடப்பட்டது. இது குழப்பத்தை ஏற்படுத்தியது.

மேற்கண்ட அரசாணைகளின்படி இரண்டு சான்றிதழ்கள் சீர்மரபினர் வகுப்பினர்களுக்கு Denotified Communities / Denotified Tribes என இரண்டு சான்றிதழ்களுக்குப் பதிலாக ஒரே சான்றிதழ் வழங்கப்படும் என்று முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இனி வருவாய் அலுவலர்கள் சீர்மரபின வகுப்பி னர்களுக்கு ஒரே சான்றிதழ் வழங்குவார்கள் என்றும் முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

இலட்சக்கணக்கான மக்களின் கோரிக்கையை ஏற்றுக் கொண்டு ஒற்றைக் கையெழுத்தில் உத்தரவிட்ட முதலமைச்சர் அவர்களுக்கு மீண்டும் மீண்டும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவராக மட்டுமல்ல திராவிடப் பேரினத்தின் தலைவராகச் செயல்பட்டு வரும் முதலமைச்சரின் பொற்கால ஆட்சி தொய்வில்லாமல் தொடரட்டும் என வாழ்த்துகிறோம்.

இவ்வாறு இராசா அருண்மொழி நன்றி தெரிவித்துள்ளார்.

### எஸ்.தனசேகர் தலைமையில்! வ.முரளிதரன் வரவேற்பில் கொளத்தூர் கிழக்குப் பகுதியில்

# அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில் - மக்கள் முதல்வரின் மனிதநேயத் திருவிழா:

## சிவசங்கரி -நடிகர் ராஜேஷ்- பட்டிமன்றம் ராஜா - கவிதா ஜவஹர் சிறப்புரை!

சென்னை, மார்ச் 18 -

சென்னை கிழக்கு மாவட்ட இளைஞர் அணி சார்பில் கொளத்தூர் கிழக்கு பகுதியில் மார்ச்1 மக்கள் முதல்வரின் மனிதநேயத் திருவிழா சூரியத் தொடர் - 71 "அறமே தமிழர் அரசியல், அதுவே தலைவர் வாழ்வியல்" எனும் நிகழ்ச்சி இன்று (18.03.2024, திங்கள்கிழமை) நேரம்: மாலை 6.00 மணிக்கு ஜெயின் பள்ளி வளாகம், அகரம், சென்னை 82. எஸ்.தனசேகர் (செ.கி.மா.இ.அ.து.அமைப்பாளர்) தலைமையில் நடைபெறுகிறது.

சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர், இந்து சமய அறநிலைத் துறை அமைச்சருமான பி.கே.சேகர்பாபு முன்னிலை வகிக்கிறார்.

பகுதிச் செயலாளர்கள் ஐ.சி.எப். வ.முரளிதரன், இ.நாகராசன், மற்றும் . லோகேஷ், ஜெ.பால முருகன், பா.ஜெகதீஷ், க. வினோத், ஜி.ஜெ.பிரபு, ஆர்.டி. சங்கர்நானா கொளத்தூர் கிழக்கு மேற்கு இளைஞர் அணித் துணை அமைப்பாளர்கள்: கே.பிரசாத். எ.வினோத். ச.ராஜேஷ். எஸ்.உதயகுமார். டி.பாலுபிரசாத். எம்.திலிப்குமார், ஆர்.தியாகராஜன், எஸ்பிரபுசூரி, ரா. இளங்கோ, என். இளங்கோ. ஆர்.சசிகுமார், பழனி, சு.இளங்கோவன் எஸ்.கே. ரமேஷ், எம். தாவூத்பீ, எம்.சி. எல்.டி.. தாமஸ் வட்ட செயலாளர்கள் : டி.சந்திரசேகர் எஸ். ரவி, என்.பொன்முடி, பி. ஊமைதுரை, கே. ஜார்ஜ்குமார் கே.பி..ஆதவன்மணி கொளத்தூர் தொகுதி மாமன்ற உறுப்பினர்கள்: டி.ஸ்ரீதனி, டி. யோகபிரியா தனசேகர், பி.அமுதா பொன்னிவளவன், கே.சாரதா, எஸ்.டி.பாஸ்கர்,க.விஜயரங்கம், வெற்றி நகர் எஸ்.முரளி, கே.சந்தானம், எம்.துளசி, சி.சந்திரசேகர், பி.வெங்கடேசன், ஜி.ராமகிருஷ்ணன், கோ. பொன்னிவளவன், எஸ். பி.சதீஷ்பாபு, ஜி.செல்வம், பொன் புகழேந்தி ஆகியோர் வரவேற்கின்றனர்.

எழுத்தாளர். சிவசங்கரி இ நடிகர் ராஜேஷ், பட்டிமன்ற புகழ் ராசை கவிஞர். கவிதா ஜவஹர் ஆகியோர் புகழுரைக்கின்றனர்.

நிகழ்ச்சியில் மேயர் பிரியா ராஜன் . டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி., இரா.கிரிராஜன் எம்.பி., ப.தாயகம்கவி எம்.எல்.ஏ., அ.வெற்றிஅழகன் எம். எல்.ஏ., ஜோசப்சாமுவேல் எம்.எல்.இ., ப,.ரங்கநாதன், இரா.விடுதலை,

கே.சந்துரு, மகேஷ்குமார் சரிதாமகேஷ்குமார் , தேவஜவஹர், எஸ்.பன்னீர் செல்வம் டி.துரைகண்ணன், ஆர்.எஸ்.சித்திக், ம.அசோக் குமார் உள்ளிட்ட பகுதி கழக நிர்வாகிகள், வட்ட செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், அணிகளின் நிர்வாகிகள், கழகத்தினர் முன்னணி செயல்வீரர்கள் கலந்து கொண்டனர். கொள்கின்றனர்.

பா.அன்பரசு நன்றி கூறுகிறார்.

### மதுரை மாநகர் மாவட்டக் கழக முன்னணித் தோழர்

# ஏ.ஆர்.சந்திரனின் சகோதரர் ஏ.ஜெயராமன் மறைவு!

## மாவட்டச் செயலாளர் கோ.தளபதி அஞ்சலி!

மதுரை, மார்ச் 18-

மதுரை மாநகர் மாவட்டக் கழக முன்னணித் தோழரும், மதுரை மாவட்ட கூட்டுறவு வங்கி முன்னாள் தலைவருமான மறைந்த ஏ.ஆர்.சந்திரன் அவர்களின் சகோதரரும், மதுரை மாநகர் முன்னாள் இளைஞர் அணி நிர்வாகியும், தற்போது 51-வது வட்டக் கழகச் செயலாளருமான ஏ.ஜெ.அசோக்குமாரின் தந்தையுமான ஏ. ஜெயராமன் (வயது 70) நேற்று (17.3.2024) மாலை 5 மணியளவில் இயற்கையெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.



மறைந்த கழகத் தோழர் ஏ.ஜெயராமன் தமது சகோதரர் ஏ.ஆர்.சந்திரன் அவர்களுடன் இணைந்து மறுமலர்ச்சி மன்றத்தை தொடங்கி வடக்கு மாசி வீதியில் கழகம் வளர்த்தவர். மறைந்த கழகத் தலைவர்கள் மதுரை எஸ்.முத்து, எஸ்.எஸ்.தென்னரசு, வே.தங்கபாண்டியன் போன்றோரை கொண்டு தமது சகோதரருடன் இணைந்து பொதுக்கூட்டங்களை நடத்தியவர்.

மறைந்த ஏ.ஜெயராமன் அவர்களின் இறுதி ஊர்வலம் இன்று (18.3.2024) பிற்பகல் 3 மணியளவில் வடக்கு மாசி வீதியிலுள்ள அவரது இல்லத்திலிருந்து புறப்பட்டு தத்தனேரி இடுகாட்டை அடைந்து அங்கு நல்லடக்கம் செய்யப்படுகிறது.

ஏ.ஜெயராமனின் மறைவுச் செய்தியறிந்து மாநகர் மாவட்டக் கழகச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. மற்றும் கழகத் தோழர்கள் அவரது இல்லம் சென்று அவருக்கு இறுதி அஞ்சலி செலுத்தினர்.

### காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தில்

# 'இந்தியா' கூட்டணிக் கட்சிகளின் மாவட்டச் செயலாளர்கள் - தலைவர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. அறிவிப்பு



நாடாளுமன்றத் தேர்தல் பணிகள் சிறப்பான முறையில் நடைபெறுவதற்காக காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தில், தி.மு.க., தலைமையிலான 'இந்தியா' கூட்டணி கட்சிகளின் மாவட்டச் செயலாளர்கள், தலைவர்கள் ஆலோசனைக் கூட்டம் நாளை (19.3.2024-செவ்வாய்க்கிழமை) காலை10.30மணியளவில், காஞ்சிபுரம் கலைஞர் பவளவிழா மாளிகையில் எனது (க.சுந்தர் எம்.எல்.ஏ.) தலைமையில் நடைபெறுகிறது.

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தில் உள்ள, தி.மு.க., காங்கிரஸ், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், இந்தியக் கம்யூனிஸ்ட், ம.தி.மு.க., விடுதலைச் சிறுத்தைகள், இந்திய யூனியன் முஸ்லீம் லீக், மனிதநேய மக்கள் கட்சி, திராவிடர் கழகம், தமிழக வாழ்வுரிமைக் கட்சி, மக்கள் நீதி மையம், தமிழ்நாடு விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சி, திராவிட இயக்கத் தமிழர் பேரவை உள்ளிட்ட கூட்டணி கட்சிகளின் மாவட்ட தலைவர்கள், செயலாளர்கள் அனைவரும் இந்த ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்பிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: 2024 நாடாளுமன்றத் தேர்தல்.

**க.சுந்தர்** எம்.எல்.ஏ.,
செயலாளர் - காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க.



சாலவாக்கம் ஒன்றியம் – சிறுப்பினாயூர் ஊராட்சியில் புதிதாக குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் ஊராட்சி பொது நிதியில் இருந்து அமைக்கப்பட்டது. இதை காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. திறந்து வைத்தார். இதில் ஊராட்சி மன்ற தலைவர் எம்.தேன்மொழி மணி, துணைத் தலைவர் ரேணுகா கணபதி தலைமையில் நடைபெற்றது. ஒன்றியச் செயலாளர் டி.குமார், மணி, ஒன்றிய துணைப் பெருந் தலைவர் கே.வசந்திகுமார் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

### கள்ளக்குறிச்சி மாவட்டம் - மூங்கில்துறைப்பட்டு தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே

# ரூ.8 கோடியில் உயர்மட்ட மேம்பாலம் அமைக்கும் பணி!

## வசந்தம் கார்த்திகேயன் எம்.எல்.ஏ. அடிக்கல் நாட்டி துவக்கி வைத்தார்!

கள்ளக்குறிச்சி மூங்கில்துறைப்பட்டு மார்ச் 18.

தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர், மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் நல்லாட்சியில் கள்ளக்குறிச்சி மாவட்ட மக்களின் 25 ஆண்டு கோரிக்கையை நிறைவேற்றும் வகையில்

கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் வசந்தம் கார்த்திகேயன் எம்.எல்.ஏ. தனது ரிஷிவந்தியம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட சங்கராபுரம் வடக்கு ஒன்றியம், மூங்கில்துறைப்பட்டு ஊராட்சி கள்ளக்குறிச்சி சங்கராபுரம்_ திருவண்ணாமலை சாலையில் அமைந்துள்ள தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே, ரூபாய் 8 கோடி மதிப்பில் புதிய உயர்மட்ட மேம்பாலம் அமைக்கும் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி துவக்கி வைத்தார்.

இதனைத் தொடர்ந்து சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் கார்த்திகேயன் எம்.எல்.ஏ. பேசுகையில், கள்ளக்குறிச்சியில் இருந்து சங்கராபுரம் வழியாக திருவண்ணாமலை செல்லும் பொதுமக்கள் மற்றும் அனைத்து விதமான வாகன ஓட்டிகள் பண்டிகை காலம் மற்றும் கோவில் திருவிழாக்கள், முகூர்த்த நாட்களில் போக்குவரத்து நெரிசலால் அவதிப்பட்டு வந்த நிலையில் கடந்த 25 வருட காலமாக இப்பகுதியை சேர்ந்த பொதுமக்கள் சாலையை அகலப்படுத்த வேண்டும் என்று கோரிக்கை வைத்து வந்த நிலையில் தற்பொழுது கள்ளக்குறிச்சி - சங்கராபுரம் - திருவண்ணாமலை இருவழிச் சாலை நான்கு வழி சாலையாக விரிவுப்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது. இது கள்ளக்குறிச்சி மாவட்ட மக்களின் 25 ஆண்டு கால கோரிக்கை மட்டுமல்ல பெரும் கனவு திட்டமாகும்.

அதனை நிறைவேற்றும் வகையில் முதலமைச்சர் சாலை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் சுமார் 176 கோடி ரூபாய் மதிப்பில் கள்ளக்குறிச்சி மாவட்ட பொறுப்பு அமைச்சர், பொதுபணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு கடந்த மாதம் இந்த திட்டத்தினை துவக்கி வைத்தார்கள். மேலும் நான்கு வழி சாலையால் இந்த பகுதியில் செல்லும் பொதுமக்கள் மற்றும் அனைத்து விதமான வாகன ஓட்டிகளுக்கும் பயனுள்ளதாக இருக்கும். ஒரு பகுதியில் சாலை வசதி மிகச் சிறப்பாக இருந்தால் தான் அந்தப் பகுதி வளர்ச்சி அடையும் என்று பேசினார்.

இந்த நிகழ்வில் கோட்ட பொறியாளர் நாகராஜன், துணைக்கோட்ட பொறியாளர்சிவசுப்பிரமணியன், உதவி செயல் பொறியாளர்கள் ஷர்மா, மணிவண்ணன், சங்கராபுரம் ஊராட்சி ஒன்றிய துணை தலைவர் அஞ்சலை கோவிந்தன், மாவட்ட கவுன்சிலர் அஸ்வினி செந்தில்குமார்,மாவட்ட மாணவரணி அமைப்பாளர் விஜய் ஆனந்த்,ஊராட்சி மன்ற தலைவர் பரமசிவம் மற்றும் அரசு அதிகாரிகள் உள்ளாட்சித் பிரதிநிதிகள், பொதுமக்கள், மாவட்ட ஒன்றிய கிளைக் கழக தி.மு.க. நிர்வாகிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

